**லாஹுகல பிரதேச சபை**

**அம்பாறை மாவட்டம்**

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஜுன் 08 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஆகஸ்ட் 03 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஏப்ரல் 30 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, லாஹுகல பிரதேச சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான லாஹுகல பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

(அ) வருவாய் நிலுவையை கணக்கிலிடுவது சம்பந்தமாக கொள்கையொன்று கடைப்பிடிக்கவில்லை.

(ஆ) பிடி ஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் காசு அடிப்படையில் கணக்கிலிடப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2011 டிசெம்பர் மாதத்தில் 6162300 ஆம் இலக்க வங்கிக் கணக்கினது வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம், காசேட்டு மீதி ரூபா 327,863 ஆகவிருந்த போதும், நிதிசார் கூற்றுக்களில் ரூபா 265,713 காட்டப்பட்டமையால் ரூபா 62,150 வித்தியாசம் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வங்கிக் கட்டணமாகிய ரூபா 1,500 மற்றும் காசேட்டில் குறிப்பிடப்படாத கொடுப்பனவாகிய ரூபா 20,000 என்பன ஆண்டிற்கான செலவினமாக நிதிசார் கூற்றுக்களில் காட்டப்படாது வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தன. மேலும், பற்றுச்சீட்டு வழங்கப்படாத ரூபா 497,168 வைப்பானது நிதிசார் கூற்றுக்களில் காட்டப்படாது மேற்கூறியவாறே கணக்கிணக்கக் கூற்றில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(இ) சபைக்குரிய டிறெக்டரினதும் டிறெய்லரினதும் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிசார் கூற்றுக்களில் காட்டப்படவில்லை.

(ஈ) வருமான, செலவினக் கணக்கில் மூலதன உதவியான ரூபா 3,369,634 மூலதனச் சொத்து விற்பனையாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப் பண வருவாய் ரூபா 746,833 ஆகும். எனினும், நிதிசார் கூற்றுக்களில் அதனை ரூபா 1,221,184 ஆகக் காட்டியமையால், ஆண்டிற்கான நீதிமன்றத் தண்டப் பண வருவாய் ரூபா 474,351 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப்பணமாகிய ரூபா 746,833 நிதிசார் கூற்றுக்களில் காட்டப்படவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருவாயாகிய ரூபா 4,000 ஆண்டிற்கான வருவாயாக வருமான,செலவினக் கணக்கிலிடப்பட்டு ஐந்தொகையில் வருவாய் நிலுவையாகக் கணக்கிலிடப்பட வேண்டுமாயினும், அவ்வாறு செய்யப்படவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை

#### (அ) பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2013 மே 09 ஆந் திகதியளவில் 2 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் கிடைக்கப்பெறாதிருந்தது. அந்த ஐய வினாக்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பிடப்படக்கூடிய பெறுமதி 2,419,067 ஆகும்.

#### (ஆ) தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 16,909,173 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி, மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 257,700 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 1,437,550 ஆகும்.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

### 2.2.1 வங்கிக் கணக்கு

நெடுங்காலமாக தேறாதிருக்கும் ரூபா 77,056 க்கான காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.2 செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள்

கீழே காணப்படும் வங்கிக் கணக்குகள் பல ஆண்டுகளாகச் செயற்படாதிருந்தன.

| | கணக்கு | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | செயற்பாடற்ற காலம் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | மக்கள் வங்கி – பொத்துவில் 1766 | (49,201) | 2007.1.1 தொடக்கம் |
| (ii) | இலங்கை வங்கி – பொத்துவில் 6864096 | 5,947 | 2010.1.1 தொடக்கம் |
| (iii) | இலங்கை வங்கி – மொனராகலை 1446 | 7,408 | 1999 க்கு முன்பிருந்து |

**2.3 வருவாய் நிர்வாகம்**

**2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன**

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வாடகை | 375,000 | 169,124 | - |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 128,350 | 137,489 | - |
| (iii) | பிடி ஆணை மற்றும் தண்டப்பனம் | 461,950 | 1,224,184 | - |
| (iv) | பிற வருவாய் | 114,150 | 6,745 | 26,763 |

**2.3.2 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

ரூபா

(i) நீதிமன்றத் தண்டப்பணம் 746,833

(ii) முத்திரைக் கட்டணம் 4,000

## 2.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) சபை தற்போது பயன்படுத்தும் 3 கெப் வண்டிகள், 4 டிறக்டர்கள், 4 என்பன சபையின் பெயருக்கு மாற்றஞ் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) உள்ளூர்க் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 33,198 உடன்படிக்கைப் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) சொத்து முகாமைத்துவம்